**குருவிட்ட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன்அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் குருவிட்ட பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபை ஒதுக்கீடுகளினால் நடைமுறைபடுத்தப்பட்ட 28 வேலைகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைபடுத்தப்பட்ட 05 வேலைகளுக்காக 2019 திசெம்பர் 31 திகதிற்கு பெற வேண்டியதாக இருந்த ரூபா 16,910,533 யினை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் மூலதன வருமானம் மற்றும் செலவுகள் போனறு பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிவைகளை சரியாக இனங்கண்டு நிதக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை பரீட்சித்து 2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய எனினும் மாற்றப்படாத நிலையான வைப்பு வட்டி ரூபா 4,133,405 நிலையான வைப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறைபாடுகளை பரீட்சித்து 2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யவதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டினுள் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 270,835 யினை மூலதனமாக்கியிருக்கவில்லை. | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை பரீட்சித்து 2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யவதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 06 கணனிகளின் பெறுமதி ரூபா 304,987 குறைவாகவும், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 62,375 கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் சரியாக மூலதனமாக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை பரீட்சித்து 2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யவதாக அறிவிக்கிறேன். |
| (உ) | ஆசியா அபிவிருத்தி வங்கி கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டி ரூபா 135,558 யினை ஆரம்ப கடன் தொகையிலிருந்து குறைப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவினங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வெண்டும். | குறைபாடுகளை பரீட்சித்து 2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யவதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | 2019 திசெம்பர் மாதத்திற்காக மீள் நிரப்ப வேண்டிய சம்பளம் ரூபா 90,000 குறைவாக காட்டப்படடிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் பெற வேண்டியவைகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | குறைபாடுகளை பரீட்சித்து 2020 ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யவதாக அறிவிக்கிறேன். |
| (எ) | 06 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 31,529,845 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் உபயோகப் பதிவேடுகளை இணக்கம் செய்ய வேண்டும். | மாதாந்த மீதிகளை ஒப்பிடுமாறு குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஏ) | ரூபா 8,935,055 ஆன 06 கணக்கு விடயங்களிற்காக விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டியதுடன், நீண்ட காலமாக முன் கொண்டு வரப்படும் இம் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கணக்குகள் பேரேட்டில் முன்னரிலிருந்து நிலவி வருவதாகவும் இது தொடர்பாக எவ்வித தகவல்களையும் கண்டறிவது கடினமானது எனவும் அறிவிக்கிறேன். |
| (ஒ) | கடந்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 50,868,601 ஆன கணக்கீட்டு குறைபாடுகளை மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகளை சரி செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமைதுவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2)இ | 2009 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 27 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 856,654 ஆன முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவற்றிலிருந்து சில முற்பணங்கள் பொறுப்புவாந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட ஆலோசனை வழங்கியுள்ளதாகவும், எஞ்சிய முற்பணங்களை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அறிவிக்கிறேன். |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 2001 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலத்திற்கு உரிய கூட்டுத் தொகை ரூபா 22,748,724 ஆன காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வைப்புகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கிறேன். |
| **(ஆ)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| | (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் எரி பொருள் பாவனை பரிசீலனை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கிறேன். |
| | (ii) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய | ஆளணிக்கான வருடாந்தம் கையொப்பம் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் | வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | இடவேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டிருக் கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | உட்படுத்தாத அலுவலர்களின் செயலாற்றுகை அறிக்கை எதிர் காலத்தில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய் 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக் கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-உள்ளூராட்சி 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இணையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக தேவையான வசதிகளை அமைக்க சபைக்கு இயலாமலிந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சேவைபெறுனர் களுக்கு தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலகத்தை ஒழுங்குபடுத்தி இணைய வசதிகளை பூர்த்தி செய்து பின்னர் இந் நடவடிக்கைகளை நிரைவேற்ற எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,751,962 ஆனதுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 7,556,116 ஆனது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பில் போடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 பில் போடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 9,189,561 | 6,297,680 | 4,067,856 | 5,999,782 | 4,361,429 | 3,492,486 | 3,451,687 | 4,603,567 |
| (ii) | வாடகை | 6,439,731 | 7,897,979 | 7,541,848 | 2,043,115 | 6,889,007 | 6,638,685 | 6,810,605 | 1,720,321 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,794,550 | 2,727,035 | 2,723,035 | - | 1,225,150 | 2,080,378 | 2,076,028 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 37,240,944 | 26,854,289 | 85,043,489 | 32,847,561 | 21,777,804 | 28,394,418 | 23,473,754 | 38,830,796 |
| | | 54,664,786 | 43,776,983 | 99,376,228 | 40,890,458 | 34,253,390 | 40,605,967 | 35,812,074 | 45,154,684 |

### 2.2.2 வீத வரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியன்று ரூபா 6,522,397 ஆன நிலுவை வீதவரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் 545 விதவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,267,303 உள்ளடங்கியிருந்தது. | நிலுவை விதவரியை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | உலகலாவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக ஆதனத் தடையை மேற்கொள்ள முடியாதுள்ளதால், நிலுவை மீதிகயிலிருந்து ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதான அறிவிக்கிறேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியன்று ரூபா 504,067 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்ஞிய காலமாக நிலவிவரும் 384 அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 422,183 உள்ளடங்கியிருந்தது. | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு நிலுவை வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி ஒப்பாய்வுப் படிவம் கிரிஎல்ல மற்றும் குருவிட்ட பிரதேச செயலகங்களிற்கு 2019 ஆகஸ்ட் 21 திகதி அனுப்பப்பட்டுள்ள போதும் இது வரை தகவல்கள் கிடைக்கவில்லை என அறவிக்கிறேன். |

### 2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரி எல்லையினுள் கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட வேண்டிய நிறுவனங்களை இனங்காணுவதற்காக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாத காரணத்தால் உரிய அனுமதிப்பத்திரம் | வருடாந்த கணிப்பீட்டினூடாக வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட வேண்டிய சகல | 2021 ஆண்டிற்காக குறித்த கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய சகல |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ள வேண்டிய சகல நிறுவனங்களும் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டுள்ளனவா என உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. | நிறுவனங்களையும் இனங்கண்டு குறித்த கட்டணங்களை அறவிட வேண்டும். | நிறுவனங்களிலிருந்தும் அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.2.4 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டியதாகயிருந்த நீதிமன்ற தண்டபணம் ரூபா 3,396,022 ஆனதுடன், மீளாய்வாண்டிற்காக அறவிட வெண்டிய முத்திரைக் கட்டணம் 2020 மார்ச் வரையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 திசெம்பர் வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | 2019 ஆண்டின் போது இது தொடர்பாக அறிந்திருக்கவில்லை எனவும், 2020 ஆண்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களை அறிவூட்டும் நோக்கத்தில் 2019 ஜனவரி மாதம் மூன்று நாட்கள், கலாவாவி தேசிய நன்னீர் மீனவ மற்றும் நீர்வாழ் சீவராசிகள் உற்பத்தி பயிற்சி நிறுவனத்தில் மேலும் 2019 ஒக்டோபர் மாதம் இரண்டு நாட்கள், ஊவ முகாமைத்துவ பயிற்சி மத்திய நிலையத்தில் இரண்டு தங்குமிட பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு இருந்தன. எனினும் 45 அங்கத்தவர்களில் 26 பேர்கள் முதற் பாடநெறிக்கும், 39 பேர்கள் இரண்டாம் பாடநெறிக்கும் சமூகளித்திருக்காததுடன் அலுவலர்களின் பங்குபற்றல் முறையே 08 மற்றும் 13 இற்கு மட்டுப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாடநெறியை நடாத்தும் நோக்கத்தை அடைந்து கொள்ள சபையிற்கு இயலாதிருந்ததுடன், பாடநெறிக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 493,932 தொகை பயனற்று இருந்தது. | மிக்க திட்டமிடலுடன் மற்றும் பயனுள்ளதாக பயிற்சி நிகழ்சித் திட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயிற்சி பாடநெறி தொடர்பாக அனைத்து மக்கள் பிரதிநிகள் மற்றும் அலுவலர்கள் அறிவூட்டப்பட்ட போதும், பல்வேறு தனிப்பட்ட காரணங்களின் மீது அவ் அனைத்து நபர்களிற்கும் சமூகமளிக்க முடியவில்லை என அறிவிக்கிறேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆண்டு 01 இற்கும் 10 இற்கும் இடையிலான காலம் முதல் நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 676,267 ஆன 27 ஊழியர் கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் தெகையை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் மீதிகளை அறவிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள 06 ஏக்கர் 01 ரூட் 20 பர்சஸ் அளவான நிதியமன்டியமூக்கலான காணியை ஆதன வியாபார நிறுவனம் | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை சரியாக மற்றும் தாமதமின்றி | குறித்த காணித் துண்டுகளிற்காக காணிப் பதிவாளர் திணைக்களத்தில் விற்பனை தொகைக்கு உரிய 01 சதவீத வரிப்பணத்தை |

| | | |
|---|---|---|
| ஒன்றினால் துண்டாக்கப்பட்டு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருந்ததுடன், இதனுடன் தொடர்பான விளம்பர அறிவித்தல்களில் 01 பர்சஸ் காணித் துண்டின் பெறுமதி ரூபா 89,000 இலிருந்து மேலென காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. என்னும் சபையின் வருமான பரிசோதகரினால் ஒரு பர்சஸின் பெறுமதி ரூபா 57,750 என மதிப்பிட்டிருந்ததால் 01 சதவீத வரியாக சபைக்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த ரூபா 318,750 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற்றுக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 வருடாந்த பண்டக் கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 வருடத்திற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையினூடாக ஏலத்தில் விற்க பரிந்துரைத்திருந்த கெப் வண்டியொன்று மற்றும் 02 கைடெக்டர்கள் ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க பராதீனம் செய்ய வேண்டும். | கெப் வண்டி மற்றும் 02 கைடெக்டர்களை ஏலவிற்பனை செய்ய அங்கீகாரம் கோரி ஆளுனர் அலுவலகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்ட போதும் இதுவரை அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என அறிவிக்கிறேன். |

**3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் 13 வாகனங்களை முறையாக சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபை பயன்படுத்தும் வாகனங்களை முறையாக சுவீகரிதத்துக் கொள்ள வேண்டும். | பரிவுரிமையை சபைக்கு சுவீகரித்துக் கொள்ளப்படாத அனைத்து வாகனங்களினதும் உரிமையை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எதிர் காலத்தில் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

**3.5.3 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திருத்த வேலைகளிற்காக 2014 ஜனவரி மாதத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த கெப் வண்டியொன்றின் திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய 05 வருட காலம் கடந்திருந்தன. ரூபா 495,000 செலவில் திருத்த வேலைகளின் பின்னர் கெப் வண்டி 2019 மார்ச் 11 திகதி சபைக்கு கிடைத்திருந்த போதும், ஓட்டத்திற்காக ஈடுபடுத்தாது விளைற்று காணப்பட்டது. | கெப் வண்டியின் உரிமையை மாற்றுவது தொடர்பான பிரச்சினையை விரைவில் தீர்த்துக் கொண்டு அதனை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | கெப் வண்டியின் உரிமையை சுவீகரிக்க தேவையான ஆவனங்களை மோடார் வாகன திணைத்திளத்திற்கு ஒப்படைத்துள்ளதாகவும், மாற்றுவதன் தாமதத்தால் வருமான அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்வது பிரச்சினைக்குரியதாக உள்ளதால் கெப் வண்டியை ஓட்டத்திற்கு செலுத்தாது சபை வளவில் நிருத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தினால் அல்லது ஏனைய எழுத்து மூல சட்டத்தினால் அல்லது சுற்றறிக்கையினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரமின்றி 34 மக்கள் பிரதிநிதிகளுக்கு கூட்டுத் தொகை ரூபா 5,200,000 ஆன கடன் முற்பாணம் வழங்கப்பட்டிருந்தது. | பிரதேச சபை சட்டத்தினால் அல்லது ஏனைய எடுத்து மூல சட்டத்தின் கீழ் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளாது கடன் முற்பாணம் வழங்கக் கூடாது. | 2018 ஜுன் 19 திகதி மகா சபையில் ஏனைய விடயங்களின் கீழ் 12-01 கொண்ட சபை தீர்மானத்தின் பிரகாரம் குறித்த கடன் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.7 பெறுகைகள்**

**3.7.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்திருக்காத போதும் ரூபா 12,115,818 பெறுமதியான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். | 2019 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும், 2020 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.7.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 நவம்பர் 25 திகதிய மகா சபை தீர்மானத்தின் பிரகாரம் 2019/2020 சிவனொளி யாத்திரைக் கால ஆரம்ப ஊர்வல நடவடிக்கைகளுக்காக ரூபா 100,000 செலவிட்டு பந்தல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக நிறுவனமொன்றை தெரிவு செய்தல் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.1(அ)(iii) மற்றும் (ஆ) வழிகாட்டியிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | பண்டம், வேலை அல்லது சேவையை பெற்றுக் கொள்ளும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பந்தலை நிர்மாணிப்பது விரைவில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விடயமொன்றாகையால் அவசர பெறுகைகளின் கீழ் சபை தீர்மாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கிறேன். |

**3.7.3 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் மேற் கொள்ளப்பட்ட இரண்டு வேலைகளிற்குரிய ரூபா 408,702 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகை செலுத்தலை அறவிட வேண்டும். | அறவிட வேண்டிய பணத்திலிருந்து ரூபா 144,871 யை தடுத்தற் பணத்திலிருந்து அறவிட்டுள்ளதாகவும், மீதியை 02 வார காலத்தினுள் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத அவதானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2009 ஆண்டில் புதிய வியாபார கட்டிடத் தொகுதியின் 05 கடையறைகளின் உடன்படிக்கை கைச்சாத்திடாது வழங்கப்பட்டதனால் கொடுப்பனவை புறக்கணித்துள்ள நிலுவை கடையறை வாடகை மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 4,436,000 வை அறிவிட சட்ட நடவடிக்கை எடுக்க இயலாமலிருந்தது. | கடையறைகளை குத்தகைக்கு வழங்கையில் உரிய முறைப்படி உடன்படிக்கை செய்து வேண்டியதுடன், பொறுப்புதாரர்களை உறுதி செய்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த கடையறைகளிற்காக அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணத்தை பதிவலிக்க ஆளுனரின் அங்கீகாரம் 2019 திசெம்பர் மாதம் கிடைத்துள்ளதால் தாமதக் கட்டணத்தை பதிவேடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் நிலுவை வாடகையை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புதிய வியாபார கட்டிடத் தொகுதியின் கடையறை ஒன்றை 2013 ஆண்டில் உடன்படிக்கை ஒன்றின் மூலம் ரூபா 3,420 மாதாந்த வாடகைக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. குத்தகை காலம் முடிவடைந்த பின்னர் 2017 ஆண்டு வரை உடன்படிக்கையின்றி கடையறையை நடாத்திச் செல்ல இடமளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை குத்தகை வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா 202,895 வை அறிவிட இயலாதிருந்ததுடன் குறித்த கடையறை 2017 ஆகஸ்ட் முதல் வருமானம் ஈட்டப்படாது மூடப்பட்டிருந்தது. | உடன்படிக்கை மீரல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கடையறைகளை குத்தகைக்கு வழங்கி வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கடையறையை இரண்டு முறை டென்டர் செய்த போதும் அதற்காக குத்தகைகாரர்கள் முன்வரவில்லை எனவும், TYPE 01 கட்டிடத் தொகுதி கடையறைகளுடன் இக்கடையறையையும் குத்தகை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | சுடலை காணி பதிவேட்டில் பதியப்பட்டுள்ள 50 சுடலைகளில் 49 இனை சுவீகரிக்க இயலாதிருந்தது. | குறித்த காணிகளை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஹொலிபிடிய உடவத்த சுடலை சுவீகரிக்கப்பட்டது எனவும் சில் சுடலைகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2013 மற்றும் 2017 ஆண்டுகளில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து மற்றும் சபரகமுவ மாகாண சபையிலிருந்து கிடைத்த 02 கலி டேலர்கள் மலசல கழிவுகளை வெளியிட இடமொன்று இல்லாத காரணத்தால் சபை வளவில் விளைவற்று காணப்பட்டது. | குறித்த சேவையை வழங்கு உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கவேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மலசல கழிவுகளை வெளியிட இடமொன்று இல்லாத காரணத்தால் 02 கலி டேலர்களும் சபை வளவில் காணப்படுவதாக அறிவிக்கிறேன். |